# பெப்ரவரி – 22 – வெள்ளி

## புனித பேதுருவின் தலைமைப் பீடம்

**“உன் பெயர் பேதுரு இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்” மத்.16:18**

## முதல் வாசகம் : 1 பேதுரு 5 : 1 - 4

சகோதரர் சகோதரிகளே! கிறிஸ்துவின் துன்பங்களுக்குச் சாட்சியும், வெளிப்படவிருக்கும் மாட்சியில் பங்கு கொள்ளப் போகிறவனுமாகிய நான், உடன்மூப்பன் என்னும் முறையில் மூப்பர்களுக்குக் கூறும் அறிவுரை உங்கள் பொறுப்பிலிருக்கும் கடவுளின் மந்தையை நீங்கள் மேய்த்துப் பேணுங்கள் கட்டாயத்தினால் அல்ல, கடவுளுக்கேற்ப மன உவப்புடன் மேற்பார்வை செய்யுங்கள் ஊதியத்திற்காகச் செய்யாமல், விருப்போடு பணி செய்யுங்கள். உங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை அடக்கி ஆளாமல் மந்தைக்கு முன்மாதிரிகளாய் இருங்கள். தலைமை ஆயர் வெளிப்படும்போது, அழியா மாட்சியுள்ள முடியைப் பெற்றுக்கொள்வீர்கள்.

**பதில்பாடல்:** ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை.

## நற்செய்தி : மத்தேயு 16 : 13 – 19

அக்காலத்தில், இயேசு, பிலிப்புச் செசரியா பகுதிக்குச் சென்றார். அவர் தம் சீடரை நோக்கி, ”மானிடமகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?” என்று கேட்டார். அதற்கு அவர்கள், ”சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் வேறு சிலர் எலியா எனவும் மற்றும் சிலர் எரேமியா அல்லது பிற இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்கின்றனர்” என்றார்கள். ”ஆனால் நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?” என்று அவர் கேட்டார். சீமோன் பேதுரு மறுமொழியாக, ”நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்” என்று உரைத்தார். அதற்கு இயேசு, ”யோனாவின் மகனான சீமோனே, நீ பேறு பெற்றவன். ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை மாறாக விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார். எனவே நான் உனக்குக் கூறுகிறேன் உன் பெயர் பேதுரு இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்” என்றார்.

**தியானம்:** இன்றைய நாளில் தூய பேதுருவின் தலைமைப்பீடத் திருவிழாவை திருச்சபை கொண்டாடி மகிழ்கின்றது. உலகத்தினரால் புறக்கணிக்கப்பட்ட கல், பயனற்றது என்று தூக்கி எறியப்பட்ட கல் தேவனுடைய கரங்களில் வீழ்கின்றபோது அவரால் ஆசீர்வதிக்கப்படுகின்ற போது எந்த கட்டிடத்திற்கு அந்த கல் உதவாது என்று உதறித்தள்ளப்பட்டதோ அதே கட்டிடத்திற்கு மூலைக்கல்லாக இறைவனால் மாற்றியமைக்கப்படும் (திபா.118:22-23) என்பது தான் இன்றைய விழாவின் மையச் செய்தியாக இருக்கின்றது. “தடுக்கிவிழும் யாவரையும் ஆண்டவர் தாங்குகின்றார். தாழ்த்தப்பட்ட யாவரையும் தூக்கி விடுகின்றார்” (திபா.145:14). நம்முடைய பலவீனங்களும், பாவங்களும் இயேசுவைப் பின்பற்றுவதற்கு ஒரு தடைக்கல்லாக மாறக்கூடாது. பேதுரு பலவீனமானவர்தான், எளிதில் தன் உணர்வுகளுக்கும், பிறருடைய விமர்சனங்களுக்கும் வீழ்ந்து போகிற மனிதர் தான். ஆனால் அவர் இயேசுவை அன்பு செய்வதில் அவரோடு இணைந்து இருப்பதில் நிலைத்திருந்தார். இயேசுவைப் புறக்கணித்தபோதும் மனம் உருகி அழுது தன்னுடைய பாவத்திற்கு பரிகாரம் செய்து இயேசுவோடு கொண்ட உறவில் தன்னை புதுப்பித்துக் கொண்டே இருந்தார். எனவே இயேசுவின் முதன்மையான அன்பை பெற்று அவரது பிரதிநிதியாக இந்த திருச்சபையை வழிநடத்தும் பொறுப்பைப் பெற்றார். “நான் பெருமைபாராட்ட வேண்டுமென்றால் என் வலுவின்மையைப் பற்றிதான் நான் பெருமை பாராட்ட வேண்டும்” என்று கூறிய தூய பவுலடியாரைப் பார்த்து ஆண்டவர் சொன்னது, “என் அருள் உனக்குப்போதும் வலுவின்மையில்தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்” (2கொரி.12:9-10) என்று சொல்லி தேற்றி அவரை புற இனத்தாருக்கு நற்செய்தி அறிவிக்கும் திருத்தூதராக மாற்றினார். உலகம் உன்னைப்பார்த்து என்ன சொல்லுகின்றது என்பதில் அல்ல மாறாக உன்னைக்குறித்து உன்னுடைய தேவனுடைய திட்டம் என்ன என்பதை அறிந்து கொள்வதில்தான் நம்முடைய வாழ்வின் இலக்காக அமைய வேண்டும். என்னிடத்தில் என்ன பலவீனம் இருக்கின்றது, பாவம் இருக்கின்றது என்பதை அறிந்து கவலைப்படுவதில் அல்ல மாறாக அந்த பலவீனத்தை பலமாக மாற்றும் தேவனில் நம்மை அர்ப்பணிக்கிறோமா என்பதில்தான் நம்முடைய வாழ்வின் பொருள் அமைந்திருக்கின்றது. கடவுள் நம் ஒவ்வொருவரைக் குறித்தும் திட்டம் வகுத்து வைத்திருக்கின்றார். நாம் அவருடைய கரங்களில் வீழுகின்றபோது நம்மையும் வல்லமையாக அவர் பயன்படுத்திடுவார் அறுந்திட்ட கம்பிகளில் இருந்துகூட இனிமையான இசையை உருவாக்குபவன் திறம்படைத்த கலைஞன். நாம் அறுந்திட்ட கம்பிகளாக இருந்தாலும் நம்மை மீட்டுபவர் இறைவன். நம்மிலிருந்து இனிமையான இராகத்தை அவர் உருவாக்கிடுவார்.